# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.132/2025

### அ.சா. 7 (LW 13 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திருமதி. பாண்டியம்மாள்** | **தொழில்** | **காவல் ஆய்வாளர்** |
| க/ **பெயர்** | | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **25.06.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 வது எதிரி ஆஜர். 2,3,5 எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தென்காசி மாவட்டத்தில் சங்கரன் கோவில் உட்கோட்டம், சின்ன கோவிலா குளம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.06.2014 அன்று திண்டுக்கல் மாவட்டம் அம்பாத்துறை காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது அம்பாத்துரை திருநகர் காலனியை சேர்ந்த சுப்பையா மகன் ராமகிருஷ்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 101/2014 இதச பிரிவுகள் 392 இதசவாக வழக்கு பதிவு செய்து வாதியின் புகார் மனுவையும் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் இணைத்து நீதித்துறை நடுவர் எண்.3.அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் ஒரு நகலை காவல் ஆய்வாளர் அம்பாத்துரை வட்டம் அவர்களுக்கும் அனுப்பி வைத்தேன். நான் பதிவு செய்த முதல்தகவல் அறிக்கை என்னிடம் காட்டப்படுவதுதான். அது **அ.த.சா.ஆ.5.** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

புகார்தாரர் கொடுத்த புகார் மனுவை யார் எழுதினார்கள் என எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் புகார்தாரர் கொடுத்த புகாரை பதிவு செய்தேன், யார் எழுதினார்கள் என தெரியாது. புகார்தாரர் கொடுத்த புகார் மனுவில் பல்சர் வாகனம், டிஸ்கவர் என சொல்லியுள்ளதற்கு அதன் வாகன எண் குறிப்பிட்டு புகாரில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் எதிரிகள் பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். முதல் தகவல்

**அறிக்கையின் அசலை எத்தனை மணிக்கு நீதித்துறை நடுவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றால் உடனை அனுப்பி வைத்தேன், நேரம் தெரியவில்லை. நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் புகார்தாரர் என்னிடம் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.**

**<u>மறு விசாரணை – இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.06.25 21:31:07 +0530

Additional District and Sessions Judge,

**Dindigul.**